கடிதம் வென்றவர்
உண்மை முடிவு பாரபட்சமின்மை
தேசிய நாளிதழ்
தலைவர் மற்றும் தலைமை ஆசிரியர்: அனில் குமார்
தெலுங்கானா,ஆந்திரா,கர்நாடகா,தமிழ்நாடு

తెలుగు జాతీయ దినపత్రిక
అక్షర విజేత
నిజం నిర్భయం నిష్పక్షం
తెలంగాణ, ఆంధ్రప్రదేశ్, తమిళనాడు, కర్ణాటక

ಅಕ್ಷರ ವಿಜೇತ
ನಿಜ ನಿರ್ಭಯ ನಿಷ್ಪಕ್ಷ ಎಡಿಟರ್: ಅನಿಲ್‌ಕುಮಾರ್

| Sunday 31 August 2025 | தொகுதி – 06 | பிரச்சினை – 10 | விலை – 6.00/– | vijethatelugudaily@gmail.com | www.Vijethadaily.com |
|---|---|---|---|---|---|



# ஊரு ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

சென்னை: தமிழக மக்களின் நலன் காக்க, அதிமுக ஆட்சி மீண்டும் அமைய அனைவரும் கரம் கோர்க்க வேண்டும் எனவும், "ஊரு ரெண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்" என்ற பழமொழிக்கேற்ப திமுக இப்போது குளிர் காய்ந்து கொண்டிருக்கிறது என அதிமுகவினருக்கு கடிதம் எழுதியுள்ளார் அதிமுக முன்னாள் பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் தோழியான சசிகலா.இதுதொடர்பாக அவர் எழுதியுள்ள கடிதத்தில்," அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் தொண்டர்களுக்கான ஒரு இயக்கமாகவும் ஏழை எளிய மக்களுக்கான ஒரு இயக்கமாகவும் நம் இருபெரும் தலைவர்களின் தலைமையில் சிறப்புடன் செயலாற்றி வந்துள்ளது.

கழகத்தை தோற்றுவித்து, தொடர் வெற்றிகளைப் பெற்று, 10 ஆண்டுகளுக்கும் மேலாக இத்தமிழ் மண்ணில், மக்களுக்கான மகத்தான நல்லாட்சியை நடத்தியவர் பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்ஜிஆர் அவர்கள்.

ஜெயலலிதா

புரட்சித்தலைவரின் மறைவிற்கு பிறகு மாற்றார் பலரும் இனி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் இயக்கமே இருக்காது அது சிதறுண்டு விடும் என கனவு கண்டு கொண்டிருந்த நேரத்தில் இதோ தாயாக நான் இருக்கிறேன். கழகத்தையும், தொண்டர்களையும் தமிழக மக்களையும் காப்பேன் என சூளுரைத்து துரோகிகளின், விரோதிகளின் சதிச்செயல்களையெல்லாம் துணிச்சலுடன் முறியடித்து சுமார் 35 ஆண்டுகளாக கழகத்தை கட்டி காப்பாற்றி சேதாரமின்றி வளர்த்தெடுத்து, தமிழ்நாட்டின் முதலமைச்சர் பொறுப்பை ஏற்று அனைத்துத்தரப்பு மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்று நல்லதொரு ஆட்சியை வழங்கியவர் நம் இதயதெய்வம் மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்கள்.

# அசுர அடி.. 12 பந்தில் 11 சிக்ஸர்..



கடிதம் வென்றவர், | கொச்சி:

2025 கேரள கிரிக்கெட் லீக் (KCL) தொடரில், சல்மான் நிசார் என்ற வீரர் நம்பமுடியாத, நினைத்துப் பார்க்க முடியாத ஒரு சாதனையை நிகழ்த்தியுள்ளார். ஒரு பேட்ஸ்மேன் தனது பீஸ்ட் மோடுக்கு' சென்றால் என்ன நடக்கும் என்பதற்கு இந்த ஆட்டம் ஒரு சாட்சியாக இருந்தது. கடைசி இரண்டு ஓவர்களில் மட்டும் 71 ரன்களை விளாசி, கிரிக்கெட் உலகையே தன்பக்கம் திருப்பியுள்ளார். அதிலும் 12 பந்துகளில் 11 சிக்ஸர்களை விளாசி வாயடைக்க வைத்தார்.திருவனந்தபுரத்தில் நடைபெற்ற காலிகட் குளோப்ஸ்டார்ஸ் மற்றும் அதானி திருவனந்தபுரம் ராயல்ஸ் அணிகளுக்கு இடையேயான போட்டியில் இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க சம்பவம் அரங்கேறியது. முதலில் பேட்டிங் செய்த காலிகட் அணி, 18 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்புக்கு 115 ரன்கள் எடுத்து தடுமாறிக் கொண்டிருந்தது. அப்போதுதான், சல்மான் நிசார் தனது விஸ்வரூபத்தைக் காட்டத் தொடங்கினார்.

# நீங்க சொன்னா நான் பெத்துக்கணுமா?



கடிதம் வென்றவர், | மதுரை:

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்கள் வைகை ஆற்றில் மிதந்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.தமிழ்நாட்டில் அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் முகாம்கள் நடத்தி மக்களிடம் மனுக்களை பெறும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற புதிய திட்டத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார்.

## திமுக எதிர்ப்பு வாக்குகள் மட்டுமல்ல



சென்னை: 2026 சட்டசபைத் தேர்தலில் விஜய் திமுக எதிர்ப்பு வாக்குகளை பிரிப்பதால், அது திமுகவுக்கு சாதகமாக மாறி இருப்பதாக சி வோட்டர் மற்றும் மூட் ஆஃப் தி நேஷன் கருத்துக்கணிப்பு வெளியாகி இருக்கிறது. இதுதொடர்பாக பத்திரிகையாளர் மணி, விஜய் திமுக எதிர்ப்பு வாக்குகளை மட்டும் பிரிக்கவில்லை. முதல் தலைமுறை வாக்காளர்கள், பெண்கள் மற்றும் இளைஞர்கள் வாக்குகளையும் பிரிக்கிறார் என்று கூறியுள்ளார் 2026 சட்டசபைத் தேர்தலுக்கு இன்னும் 7 மாதங்கள் இருக்கும் நிலையில், இந்தியா டுடே மற்றும் சி வோட்டர் கருத்துக்கணிப்பு வெளியாகி இருக்கிறது. அதன்படி நாடாளுமன்றத் தேர்தல் நடந்தால், தமிழ்நாட்டில் உள்ள 39 தொகுதிகளில் 36 தொகுதிகளை திமுக கூட்டணி கைப்பற்றும் என்று கணித்துள்ளது. திமுக கூட்டணியின் வாக்கு சதவிகிதம் 52ல் இருந்து 48 சதவிகிதமாக குறைந்திருப்பதாகவும் கூறியுள்ளது.

## "கால்கடுக்க நின்று மனு அளித்தால் அதனை நீரில் மிதக்கவிடுவது தான் நல்லாட்சியா?"

சென்னை: "மக்களிடம் இருந்துபெறப்பட்ட 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் மனுக்களை ஆற்றில் மிதக்கவிட்டு மக்கள் நலனில் தான் காட்டும் அக்கறையைத் தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது திமுக அரசு" என பாஜக மாநில தலைவர்நயினார் நாகேந்திரன் விமர்சித்துள்ளார்.தமிழகம் முழுவதும் அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில் முகாம்கள் நடத்தி மக்களிடம் மனுக்களை பெறும் வகையில் 'உங்களுடன் ஸ்டாலின்' என்ற புதிய திட்டத்தை தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடந்த ஜூலை 15 ஆம் தேதி தொடங்கி வைத்தார். 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் மகளிர் உரிமைத்தொகை, பிறப்பு, இறப்பு சான்றிதழ், ஆவணங்களில் பெயர் திருத்தம் உள்ளிட்ட பவேறு செயல்பாடுகளுக்கு மனு அளிக்கலாம். இந்நிலையில், 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் பெறப்பட்ட மனுக்கள்வைகை ஆற்றில் மிதந்து வந்ததாக தகவல் வெளியாகி உள்ளது.



முகாம்களில் வழங்கப்பட்ட மனுக்கள் பூர்த்தி செய்யப்பட்டு அலுவலர்களிடம் வழங்கப்பட்ட நிலையில் அந்த மனுக்கள் ஆற்றில் மிதந்து பொதுமக்கள் மத்தியில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் வைகை ஆற்றில் 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் பெறப்பட்ட மனுக்கள் மிதப்பதைக் கண்டு பொதுமக்கள் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். ஆற்று நீரில் மிதந்து வந்த மனுக்களை சேகரித்த போலீசார் அதனை ஆற்றில் வீசியவர்கள் யார் என விசாரணையில் ஈடுபட்டு வருகின்றனர். சிவகங்கை அருகே உள்ள கீழடி, கொந்தகை, நெல் முடிகரை, மடப்புரம் பகுதிகளில் நடந்த 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் பெறப்பட்ட மனுக்கள் ஆற்றில் மிதந்து வந்ததாக தெரியவந்துள்ளது.இந்நிலையில், இந்த விவகாரத்தைத் தொடர்ந்து, எதிர்க்கட்சியினர் திமுக அரசை விமர்சித்து வருகின்றனர். தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன், "கூட்டத்தில் கால்கடுக்க, வியர்வை சிந்தி நின்று மனு அளித்தால், அதனை நீரில் மிதக்கவிடுவது தான் நாடு போற்றும் நல்லாட்சியா?" எனக் கேள்வி எழுப்பி உள்ளார்.



## ஊரு ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்

அதிமுக இவற்றிற்கெல்லாம் எனது தன்னலமற்ற பங்கும் அடங்கியிருக்கிறது என்று எண்ணிப்பார்க்கையில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். ஆண்டுகளை கடந்தும் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நின்று நிலைத்திருக்கும் அண்ணாவின் உருவம் பொறித்த கொடி என்றும், எங்கும், எப்பொழுதும் பட்டொளி வீசி பறக்கும்" என்று புரட்சித்தலைவர் அவர்கள் கூறினார். "இன்னும் 100 ஆண்டுகளையும் கடந்து மக்களுக்காகவே நம் இயக்கம் இயங்கும்" என்று நம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் சட்டப்பேரவையிலேயே சூளுரைத்தார். ஆனால் இன்று நிலைமை வேறாக உள்ளது. நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சியினரும் பார்த்து பொறாமைப்படும் அளவுக்கு ஒளிர்ந்த நம் இயக்கம். இன்றைக்கு ஏளனமாக பேசும் அளவுக்கு இருப்பது மிகவும் வேதனை அளிக்கிறது. நம் இருபெரும் தலைவர்கள் இல்லாத நிலையில் இன்று கழகம் பெரும் சோதனைக்கு ஆளாகி உள்ளது. புரட்சித்தலைவர் மற்றும் புரட்சித்தலைவி மம்மா ஆகியோரால் அடையாளம் காட்டப்பட்ட அவர்கள் இருவரது வழியிலும் நடைபோட்ட நம்மில் சிலர் பிரிந்து கிடக்கிறோம். கட்சியிலிருந்து விலக்கப்பட்டவர்கள் விலகி இருப்பவர்கள் என அனைவரும் கரம் கோர்த்து ஒன்றிணைந்து தம் எதிரியை வென்றாக வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

சசிகலா

## வைகை ஆற்றில் மிதந்த 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம் மனுக்கள்



கடிதம் வென்றவர், | மதுரை:

இதைத்தொடர்ந்து தமிழ்நாடு முழுவதும் 10,000 இடங்களில் முகாம்கள் நடைபெற்று ஊரகப் பகுதிகளைப் பொறுத்தவரை 15 துறைகளின் வாயிலாக 45 சேவைகளும், நகர்ப்புறங்களைப் பொறுத்தவரை 13 துறைகளின் வாயிலாக 43 சேவைகளும், வழங்கப்பட்டு வருகிறது. 'உங்களுடன் ஸ்டாலின்' முகாமில் மகளிர் உரிமைத் தொகை, பிறப்பு, இறப்பு சான்றிதழ், ஆவணங்களில் பெயர் திருத்தம், பட்டா, சிட்டா உள்ளிட்டவற்றுக்கான மனுக்களை மக்கள் அளித்து வருகின்றனர். இந்த முகாம்களில் பெறப்படும் விண்ணப்பங்கள் சரிபார்க்கப்பட்டு உரிய பயனாளிகள் பட்டியல் விரைவில் வெளியிடப்படும். எனவே பொதுமக்கள் முகாம்களில் மட்டுமே விண்ணப்பங்களை பெற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது. 'உங்களுடன் ஸ்டாலின்' முகாம்களில் மக்கள் வழங்கும் மனுக்கள் மீது அதிகபட்சம் 45 நாட்களில் தீர்வு காணப்படும் என அரசு அறிவித்திருக்கும் நிலையில், இதுவரை நடந்த முகாம்கள் மூலம், லட்சக்கணக்கான மனுக்கள் பெறப்பட்டிருப்பதாக தமிழ்நாடு அரசு தெரிவித்துள்ளது.

# விஜய் - சீமான் இடையே 3வது இடத்துக்குத்தான் போட்டி நடக்கும்

## தமிழிசை போடும் கணக்கு






சென்னை: "தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இந்தியா கூட்டணிக்கும் இடையே தான் போட்டி. அடுத்த இடத்திற்கு சீமானும் விஜய்யும் போட்டி போட்டுக் கொள்ளலாம்." என பாஜக மூத்த தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார்.சென்னையை அடுத்த மூவரசம்பட்டில் நடைபெற்ற விநாயகர் சதுர்த்தி விழாவில், முன்னாள் ஆளுநரும் தமிழக பாஜக மூத்த தலைவருமான தமிழிசை சவுந்தரராஜன் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தார். அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.அப்போது பேசிய தமிழிசை, "விநாயகர் சதுர்த்தி விழாக்கள் மக்களை இணைக்கும் விழாவாக உள்ளது. இந்த விழாக்களை மதம் சார்ந்தது என்பார்கள். ஆனால் கலையை வளர்க்கவும், அன்னதானம் செய்யவும் பயன்பட்டு வருகிறது. தமிழகத்தில் ஆன்மீகம் தான் வளர்ந்து ஓங்கும். விநாயகர் சதுர்த்திக்கு வேறு மாநில முதல்வர்கள் வாழ்த்து சொல்கின்றனர். நம் முதலமைச்சர் மட்டும் வாழ்த்து சொல்லாதது தவறு. மன்னிக்க முடியாத குற்றம். மக்களுக்கு ஒரு நம்பிக்கை இருக்கும் போது முதலமைச்சர் மதிக்க வேண்டும்.தமிழ்நாடு மக்களுக்கு பாதுகாப்பு இல்லை. பல பிரச்சனைகள் உள்ளன. ஆனால் முதலமைச்சர் பீகார் சென்று விட்டார். இங்கு பீகார் மக்களை குறை சொல்லி விட்டு அங்கு சென்று உயர்த்தி பேசி இருக்கிறார். உங்களுடன் ஸ்டாலின் முகாமில் வாங்கிய மனுக்கள் எல்லாம் வைகை ஆற்றில் மிதக்கிறது. தவளையுடன் ஸ்டாலின், மீன்களுடன் ஸ்டாலின் என்று ஆரம்பித்து உள்ளாரோ என தெரியவில்லை. பெயரளவிற்கு திட்டங்களை செய்து விட்டு மக்களை பற்றி கவலைப்படவில்லை.

தமிழகத்தில் எங்கள் கூட்டணி பலமாகி வருகிறது. இன்னும் 8 மாதத்தில் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் அதிமுக - பாஜக கூட்டணிதான் வெற்றி பெறும். மக்கள் துன்பப்பட்டு கொண்டு இருக்கிறார்கள். மோடி எதுவும் செய்யவில்லை என்று கூறுகின்றனர். ஆனால் ரூ.15 ஆயிரம் கோடி செலவில் எக்ஸ்பிரஸ் சாலை வசதி முலம் சென்னை - பெங்களூரை 3 மணி நேரத்தில் இணைக்கக்கூடிய அதிவேக சாலை உள்ளது. வந்தே பாரத் 7 வழி தடத்தில் ரயில்கள் செல்கிறது.பிரதமர் மோடி தமிழக மக்களுக்கு எல்லா நல்லதும் செய்து வருகிறார். இனி ஒன்றும் செய்யவில்லை என்ற விமர்சனம் எடுபடாது. தீர்வு காணபட்ட மனுக்களை ஆற்றில் வீச முடியுமா? அப்போ தீர்வு காணாமல் நிறைய மனுக்கள் உள்ளதா. மக்களை பற்றி கவலைப்படவில்லை. புது பெயர்களை வைத்துவிழா எடுப்பார்கள். விநாயகரை ஆற்றில் கரைப்போம். ஆனால் அவர்கள் மனுக்களை கரைக்கின்றனர்.

விஜய் அரசியலுக்கு வந்து உள்ளார். அவருக்கு ரசிகர்கள் கூட்டம் இருக்கிறது. ஆனால் போட்டி என்பது தேசிய ஜனநாயக கூட்டணிக்கும் இந்தியா கூட்டணிக்கும் இடையே தான். அடுத்த இடத்திற்கு சீமானும் விஜய்யும் போட்டி போட்டு கொள்ளலாம். விஜய் மாற்று சிந்தனையை சொல்வார் என்று எதிர்பார்த்தோம்.ஆனால் பெரியார், அண்ணா, எம்ஜிஆர், விஜய்காந்த் ஆகியோரைத் தான் சேர்த்து இருக்கிறார். இவர்கள் சிந்தனையில் கட்சி நடத்துகிறார்கள். புதிய சிந்தனையில் இல்லாமல் புதிய கட்சி எதற்கு என்று தெரியவில்லை. பவுன்சர் தூக்கி போட்டது யார் என்று விவாதம் நடக்கிறது. பவுன்சர் கலாச்சாரமே தவறு. விஜய்யால் வெற்றியின் பக்கம் வர முடியாது. ஒவ்வொரு மாநாட்டிலும் அதனை நிரூபித்து கொண்டு இருக்கிறார்." என்று தெரிவித்துள்ளார்.


# தனக்கு எதிராக போராடிய பாஜகவினரை அழைத்து..



பாட்னா: ராகுல் காந்தி மற்றும் காங்கிரஸ் கட்சிக்கு எதிராக பாஜகவினர் போராட்டம் நடத்திக்கொண்டிருந்த நிலையில், அந்த வழியாக சென்ற ராகுல் காந்தி போராட்டத்தில் ஈடுபட்ட பாஜகவினரை அழைத்து சாக்லேட் கொடுத்திருக்கிறார்.பீகாரில் விரைவில் சட்டப்பேரவை தேர்தல் நடைபெற இருக்கிறது. இந்நிலையில் அம்மாநிலத்தில் தேர்தல் ஆணையம் மேற்கொண்ட வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்த நடவடிக்கை கடும் விமர்சனங்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இந்த நடவடிக்கையின் மூலம் 65 லட்சம் வாக்காளர் நீக்கப்பட்டிருப்பதாக தேர்தல் ஆணையம் அறிவித்திருக்கிறது. ஆனால் இதை ஏற்காத காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள், பாஜக தேர்தல் ஆணையத்தின் உதவியின் மூலம் வாக்கு திருட்டில் ஈடுபட்டிருப்பதாக விமர்சித்துள்ளன. இந்த விவகாரத்தை மக்கள் மத்தியில் பேசுபொருளாக மாற்ற காங்கிரஸ் சார்பில் வாக்காளர் அதிகாரம் யாத்திரை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பீகார் முழுவதும் ராகுல் காந்தி சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கிறார். இந்நிலையில் தர்பங்காவில் பாரதிய ஜனதா யுவ மோர்ச்சா அமைப்பினர் காங்கிரஸுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். காங்கிரஸ் மேடையில் வைத்து பிரதமரையும், அவரது தாயையும் தொண்டர் ஒருவர் அவதூறாக பேசியிருந்தார். இந்த சம்பவத்தை கண்டித்தும், காங்கிரஸ் கட்சியை கண்டித்தும் இந்த போராட்டம் நடந்தது. அந்த வழியாக காரில் வந்த ராகுல் காந்தி உடனே காரை நிறுத்தி போராட்டக்காரர்களை அழைத்து சாக்லேட் கொடுத்திருக்கிறார். இந்த சம்பவம் பீகார் அரசியலில் கவனம் பெற்றிருக்கிறது.

முன்னதாக அவதூறு பேச்சு தொடர்பாக சம்பந்தப்பட்ட நபரை காவல்துறை கைது செய்திருந்தது. அதேபோல, பாட்னாவில் பாஜக மற்றும் காங்கிரஸ் கட்சியினரிடையே இந்த விவகாரம் தொடர்பாக கைகலப்பும் ஏற்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.




# சென்னைக்கு மழை இருக்கா? டெல்டாவுக்கு போகும் கார்மேகங்கள்..

சென்னை: தமிழ்நாட்டில் கடந்த சில நாட்களாக தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்து வருகிறது. இந்நிலையில் இன்றும் நாளையும் சென்னையில் மழை பெய்யுமா? என தனியார் வானிலை ஆர்வலர் விளக்கமளித்திருக்கிறார்.தனியார் வானிலை ஆர்வலர் COMK தனது டிவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருப்பதாவது, "தமிழ்நாட்டின் சமவெளிப் பகுதிகளில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. டெல்டா பகுதிகளில் சில இடங்களில் நல்ல மழை காணப்படுகிறது. சேலத்திற்கு அருகிலும் சில இடியுடன் கூடிய மழை மேகங்கள் தென்படுகின்றன.சென்னை சென்ட்ரல் தொடங்கி எழும்பூர், சேத்துப்பட்டு, திருவல்லிக்கேணி, மயிலாப்பூர், திருவொற்றியூர், கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை, ஐஓசி, கோயம்பேடு, அண்ணாநகர், கொளத்தூர், வில்லிவாக்கம், பாடி, அயனாவரம் உள்ளிட்ட பகுதிகளில் ஒரு மணி நேரத்திற்கும் மேல் கனமழை பெய்து வருகிறது.முன்னதான சென்னை வானிலை ஆய்வு மையம் விடுத்திருந்த அறவிப்பில், "மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, இன்று தொடங்கி செப்.1 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் பலத்த தரைக்காற்று மணிக்கு 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும்.

செப்.2-5 வரை தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.
அதிகபட்ச வெப்பநிலை பற்றிய முன்னறிவிப்பு:
அதிகபட்ச வெப்பநிலை மாறுதலின் போக்கை பொறுத்தவரை இன்றும் நாளையும் தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் 2-3" செல்சியஸ் வரை படிப்படியாக உயரக்கூடும்.இயல்பு நிலையிலிருந்து அதிகபட்ச வெப்ப அளவின் வேறுபாட்டை பொறுத்தவரை இன்றும் நாளையும் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும், அதிகபட்ச வெப்பநிலை 2-3 செல்சியஸ் இயல்பை விட அதிகமாக இருக்கக்கூடும்.
சென்னை மற்றும் புறநகர் பகுதிகளுக்கான வானிலை முன்னறிவிப்பு:
இன்று (30-08-2025): வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில், லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 27-28* செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்.
நாளை (31-08-2025) வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில், லேசான / மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 37° செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 28° செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும்" என தெரிவிக்கப்பட்டிருந்தது.

அச்சிடப்பட்டது, வெளியிடப்பட்டது மற்றும் சொந்தமானது DR.B.ANILKUMAR ,@ 407 தர்ணாகா , ஹைதராபாத் , தெலுங்கானா மாநிலம். DAIWIK PUBLICATIONS pvt.ltd இல் வெளியிடப்பட்டது.
SNEHITHA PRINTERS H.NO: 2-6 , வாரங்கல் மாவட்டம்.தெலுங்கானா மாநிலம் , ஆசிரியர் DR.B.ANILKUMAR ,RNI NO TELTEL/2021/ 81079 , செல்: 7702866885 ,vijethatelugudaily@gmail.com